ஸ்டேட் வங்கியில் பணி: அப்ரன்டீஸ் பிரிவில் 7,150 இடங்கள் காலியாக உள்ளன. கல்வித் தகுதி - பட்டப்படிப்பு, வயது - 20 - 28, தேர்ச்சி முறை - எழுத்துத் தேர்வு, விண்ணப்பிக்கும் முறை - ஆன்லைன், ஸ்டைஃபண்டு - மாதம் ரூ.15 ஆயிரம், கடைசி நாள் - 08-06-26, விவரம் - sbi.bank.in

கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் பணி: மெக்கானிக்கல், சிவில், ஃபிட்டர், வெல்டர், எலக்ட்ரிக்கல், பைனான்ஸ், அக்கவுன்ட்ஸ், ஹெச்.ஆர். ஆகியவற்றில் மொத்தம் 158 இடங்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். கல்வித் தகுதி - ஐடிஐ, டிப்ளமோ, டிகிரி, வயது - 18 - 28, தேர்ச்சி முறை - சான்றிதழ் சரிபார்ப்பு, கடைசி நாள் - 30-06-26, விவரம் - npcil.nin.in

சாத்தூர், காரைக்குடி சார் பதிவாளர் அலுவலகங்களில் சோதனை

கணக்கில் வராத பணம் பறிமுதல்

விருதுநகர்

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் உள்ள பத்திரப் பதிவுத் துறை சார் பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு துறை ஆய்வாளர் பூமிநாதன் தலைமையிலும், விருதுநகரில் மாவட்ட சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆய்வாளர் ஜாஸ்மின் மும்தாஜ் தலைமையிலும் தலா 10 பேர் கொண்ட குழுவினர் சோதனை நடத்தினர்.

சார் பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களிடமும், பத்திரப் பதிவுக்கு வந்த பொதுமக்கள், நிலத் தரகர்களிடமும் சோதனை நடத்தப்பட்டது. அவர்களிடம் இருந்த பணம் பறிமுதல் செய்யப்பட்டது. அதோடு, பறிமுதல் செய்யப்பட்ட பணத்துக்கு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்த பிறகு பணத்தைப் பெற்றுக் கொள்ள பொதுமக்களுக்கு லஞ்ச ஒழிப்புப் பிரிவு போலீஸார் அறிவுறுத்தினர்.

காரைக்குடியில் திருச்சி - ராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சார்பதிவாளர் அலுலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் கண்ணன் தலைமையிலான போலீஸார் சோதனை நடத்தினர். அப்போது, இடைத்தரகர் ஒருவரிடமிருந்து கணக்கில் வராத ரூ.73,000-ஐ பறிமுதல் செய்தனர். தொடந்து சார்பதிவாளர், ஊழியர்கள், இடைத்தரகர்கள் ஆகியோரிடம் இரவு வரை விசாரணை நடத்தினர்.

அதேபோல், சிவகங்கையில் திருப்பத்தூர் சாலையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு ஆய்வாளர் ஜேசுதாஸ் தலைமையிலான போலீஸார் சோதனை நடத்தினர்.

தொடர்ந்து, ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி சார்-பதிவாளர் அலுவலகத்திலும் லஞ்ச ஒழிப்பு போலீஸார் நேற்று சோதனை நடத்தினர்.

சிறுமி குளிப்பதை பார்த்த இளைஞர் போக்சோவில் கைது

ராமேசுவரம்

ராமேசுவரம் அருகே மண்டபம் முகாம் முல்லை நகரைச் சேர்ந்த 17 வயது சிறுமி. சுற்றுச் சுவர் கொண்ட தனது வீட்டின் திறந்த வெளியில் குளித்துக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியாகச் சென்ற இளைஞர் ஒருவர் எட்டிப்பார்த்ததைக் கண்டு சிறுமி கூச்சலிட்டார். இதையடுத்து அந்த இளைஞர் தப்பி ஓடினார். சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில் மண்டபம் போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்தனர். அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சி அடிப்படையில் அந்த இளைஞரை போலீஸார் பிடித்தனர். விசாரணையில், மண்டபம் டி.நகரைச் சேர்ந்த சதாம் உசேன் (28) என்பதும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து சதாம் உசேனை போக்சோவில் போலீஸார் கைது செய்தனர்.

ராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தை சாலையோர வியாபாரிகள் முற்றுகை

ராமநாதபுரம்

ராமநாதபுரம் நகராட்சி அலுவலகம் முன் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்ட சிஐடியு சாலையோர வியாபாரிகள் சங்கத்தினர். படம்: எல்.பாலச்சந்தர்

புதிய பேருந்து நிலையத்தில் சாலையோர வியாபாரிகளை அனுமதிக்கக் கோரி, ராமநாதபுரம் நகராட்சி அலுவலகம் முன் சிஐடியு சாலையோர வியாபாரிகள் சங்கம் சார்பில் முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

ராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக 50-க்கும் மேற்பட்ட சாலையோர வியாபாரிகள் வியாபாரம் செய்து வந்தனர். இந்நிலையில், பேருந்து நிலையத்தில் ரூ.20 கோடியில் புதிய கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்றதால் அவர்களால் வியாபாரம் செய்ய முடியவில்லை. கடந்த ஆண்டு அக்டோபரில் பணிகள் முடிவடைந்து பேருந்து நிலையம் மீண்டும் பயன்பாட்டுக்கு வந்தபோது, சாலையோர வியாபாரிகளை வியாபாரம் செய்ய அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. அதனால் பல்வேறுகட்ட போராட்டங்களை நடத்தினர். இந்நிலையில் ராமநாதபுரம் மாவட்ட சிஐடியு சாலையோர வியாபாரிகள் சங்கம் சார்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடுக்கப்பட்டது. அதில் சாலையோர வியாபாரிகளை வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவு வழங்கியது. ஆனால், அதன் பிறகும் வியாபாரிகளை நகராட்சி நிர்வாகம் அனுமதிக்கவில்லை.

இந்நிலையில், உயர் நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாத நகராட்சி ஆணையரை கண்டித்து, ராமநாதபுரம் நகராட்சி அலுவலகம் முன் சிஐடியு சாலையோர வியாபாரிகள் சங்கம் சார்பில் முற்றுகை போராட்டம் நடைபெற்றது. சிஐடியு மாநில பொதுச் செயலாளர் எஸ்.கண்ணன் தலைமை வகித்தார்.

சிஐடியு மாவட்டத் தலைவர் எம்.சிவாஜி, மாவட்டச் செயலாளர் எஸ்.ஏ.சந்தானம், மாவட்டப் பொருளாளர் வி.பாஸ்கரன், சாலையோர வியாபாரிகள் சங்க மாவட்டச் செயலாளர் ரா.முத்துவிஜயன், மார்க்சிஸ்ட் மாவட்டச் செயலாளர் ஆர்.குருவேல், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் வி.காசிநாததுரை, எம்.ராஜ்குமார் மற்றும் சாலையோர வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

அதனையடுத்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் சிவகுரு பிரபாகரன் தலைமையில் சிஐடியு நிர்வாகிகள் பங்கேற்ற பேச்சுவார்த்தைக் கூட்டம் நடைபெற்றது. பேருந்து நிலையத்தில் ஆய்வு செய்த பிறகு பொதுமக்களுக்கு இடையூறு இன்றியும், சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையிலும் நடவடிக்கை எடுப்பதாக ஆட்சியர் உறுதியளித்தார். அதைத் தொடர்ந்து முற்றுகைப் போராட்டத்தை சிஐடியு சாலையோர வியாபாரிகள் சங்கத்தினர் கைவிட்டனர்.

சிவகங்கை மாவட்டத்தில்

அறிவித்ததை விட்டுவிட்டு இடையூறு இல்லாத மது கடையை மூடியதாக புகார்

சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்தில் அறிவித்ததை விட்டுவிட்டு இடையூறு இல்லாத அரசு மதுக் கடைகளை மூடியதாகப் புகார் எழுந்துள்ளது.

தமிழகத்தில் பேருந்து நிலையங்கள், கோயில்கள், பள்ளிகள், கல்லூரிகளுக்கு அருகேயுள்ள 717 அரசு மதுக்கடைகளை மூட கடந்த மாதம் முதல்வர் விஜய் உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 116 அரசு மதுக்கடைகளில் 18-ஐ மூட மாவட்ட டாஸ்மாக் நிர்வாகம் முடிவு செய்தது. அதற்கான பட்டியலையும் தயாரித்தது. ஆனால், அவசர அவசரமாக 8 கடைகள் மட்டுமே மூடிவிட்டு எஞ்சிய கடைகளை மூடாமல் விட்டுவிட்டனர்.

இந்நிலையில், அறிவித்தபடி 717 கடைகளை மூடவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. இதையடுத்து, தமிழகம் முழுவதும் எஞ்சிய கடைகளையும் மூட அரசு உத்தரவிட்டது. தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்தில் 10 கடைகளை டாஸ்மாக் நிர்வாகம் மூடியது.

ஆனால், ஏற்கெனவே பட்டியலில் வெளியிட்ட கடைகளை மூடாமல் வருவாய் குறைந்த, மக்களுக்கு இடையூறு இல்லாத கடைகளை மூடியதாக புகார் எழுந்துள்ளது. மேலும், முதல்வர் அறிவித்த பின்னர் இடையூறாக உள்ள மதுக்கடைகளை மூட பல்வேறு இடங்களில் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அந்தக் கடைகளையும் டாஸ்மாக் நிர்வாகம் அடைக்கவில்லை என்றும் புகார் எழுந்ள்ளது. இதனால், ஏற்கெனவே அறிவித்தபடி, பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள மதுக் கடைகளை மூட வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

பள்ளிகள் திறக்கப்பட்ட முதல் நாளான நேற்று ராமநாதபுரம் நகராட்சி பெண்கள் பள்ளியில் மாணவிகளுக்கு வழங்கப்பட்ட புத்தகங்கள். படம்: எல்.பாலச்சந்தர்

TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்
காகிதபுரம் - 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் விவரம்	கடைசி நாள்
262713 001276	TNPL அலகு-1ல் காகிதகூழ் பிரிவில், யூக்கலிப்டஸ் மற்றும் இதர மரகட்டைகளை இறக்குதல், அடுக்குதல் மற்றும் மரத்துண்டாக்கும் இயந்திரங்களுக்கு மரங்களை உட்செலுத்துதல்	19.06.2026

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை NIC இணையதளத்தில் மட்டும் வெளியிடப்படும். மேலும் விபரங்களுக்கு www.tnpl.com / https://tntenders.gov.in/nicgep/app இணையதளங்களை பார்வையிடவும்.

செ.ம.தொ.இ/2000/ஒப்பந்தப்புள்ளி/2026 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்

வரசக்தி ஹவுசிங் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம்: எண்.33, பழைய எண்.14, 48வது தெரு, 9வது அவென்யூ, அசோக் நகர், சென்னை-600 083
தலைமை அலுவலகம்: சாய் சதன், T.S.எண்.125 (வடக்கு பேஸ்), சிட்கோ திருவிக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-600032
ராமநாதபுரம் கிளை: எண்.146, அம்மையப்பர் டவர், முதல் தளம்,
ICICI வங்கி மாடியில், ராமநாதபுரம்-623 501.

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு Rule 8(1) (For immovable property)

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 (54/2002) மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002)-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட வரசக்தி ஹவுசிங் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் **13(2)** பிரிவு மற்றும் விதி **3-ன்** படி **27.02.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன்பாக்கி தொகையான 07.01.2026** அன்றுள்ளபடி ₹ **6,09,732.42** (ரூபாய் ஆறு லட்சத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று முப்பத்து இரண்டு மற்றும் பைசா நாற்பத்து இரண்டு மட்டும்) தொகையை அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ஒப்புதலாளர்: 1.Mr.லக்ஷ்மணன் G,** S/o.கணபதி, **2.Mrs.காளிமுத்தம்மாள் G,** D/o.கணபதி, **3.Mr.பிரதீப் L, அனைவரது முகவரி:** எண்.1/144, எட்டிவயல், எட்டிவயல் பஞ்சாயத்து, போகலூர் SRO, புதிய பேருந்து நிறுத்தம் அருகில், ராமநாதபுரம்-623 527 ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

இது முதற்கொண்டு **கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ஒப்புதலாளர்கள்** நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக **கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ஒப்புதலாளர்கள்** மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8 & 9வது விதியின் படி மற்றும் அதனுடன் பிணைக்காப்பு செயலாக்க விதிகள் 2002 படியும், **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 02.06.2026 அன்று கீழே கையொப்பமிட்டவர் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.**

இது முதற்கொண்டு **கடன்தாரர்கள்/அடமானதாரர்கள்/சக-கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ஒப்புதலாளர்கள்** மற்றும் பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **வரசக்தி ஹவுசிங் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு வந்து சேரவேண்டிய கடன் தொகை 28.05.2026 அன்றுள்ளபடி ₹6,64,770.02** (ரூபாய் ஆறு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து எழுநூற்று எழுபது மற்றும் பைசா இரண்டு மட்டும்) மற்றும் அதற்கான வட்டி, கட்டணங்கள் மற்றும் இதரசெலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்)-ன் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து)

அடமானதிலுள்ள அசையா சொத்து விவரம்

ராமநாதபுரம் பதிவு மாவட்டம், ராமநாதபுரம் பதிவு போகலூர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, பட்டா எண்.1429, S.F.எண்.169/3C, தற்போது பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.169/14A1, **மனை எண்.13, எட்டிவயல் குரூப், எட்டிவயல் கிராமம், பரமக்குடி தாலுகா, ராமநாதபுரம் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 33.5 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 33.5 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 62 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம் 68 அடி, **ஆக மொத்தம் 2177.5 சதுர அடி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 15 அடி அகல வழிப்பாதை, தெற்கு: முகமது சுலைமான் வீடு, கிழக்கு: வைரவனித்தல் லதா மனை எண்.14, மேற்கு: நவாஸ்கான்-க்கு சொந்தமான மனை எண்.12.

தேதி: 02.06.2026
இடம்: சென்னை
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
வரசக்தி ஹவுசிங் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

மக்கள் எளிதில் அணுகக்கூடிய நிர்வாகத்தை வழங்க நடவடிக்கை

ராமநாதபுரம் புதிய ஆட்சியர் உறுதி

ராமநாதபுரம்

மக்கள் எளிதில் அணுகக்கூடிய, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ராமநாதபுரம் புதிய ஆட்சியராக பொறுப்பேற்ற எம்.சிவகுரு பிரபாகரன் தெரிவித்தார்.

ராமநாதபுரம் ஆட்சியராக இருந்த சிம்ரன்ஜீத் சிங் காலோன் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையராக இருந்த எம்.சிவகுரு பிரபாகரன் ராமநாதபுரம் ஆட்சியராக நியமிக்கப்பட்டு நேற்று ஆட்சியராகப் பொறுப்பேற்றார்.

அப்போது ஆட்சியர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மை, அதனைச் சார்ந்த தொழில்கள், மீன்வளத் துறை, குடிநீர் மேலாண்மை, கல்வி, சுகாதாரம், பெண்கள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றம், தொழில் வாய்ப்பு உருவாக்கம், அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

கடலோர மாவட்டம் என்பதால் பேரிடர் மேலாண்மை, காலநிலை மாற்றத் தாக்கங்களை எதிர்கொள்ளும் திறன், கடல்சார் உயிரியல் வளப் பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி ஆகிய துறைகளிலும் சிறப்பு கவனம் செலுத்தப்படும். மக்கள் குறைதீர்ப்பு எனது நிர்வாகத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருக்கும். பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடிய, வெளிப்படையான நிர்வாகத்தை வழங்க மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து செயல்படும். அரசின் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவேன், என்றார்.

RAMANATHAPURAM

ராமநாதபுரம் மாவட்ட புதிய ஆட்சியராகப் பொறுப்பேற்ற எம்.சிவகுரு பிரபாகரன்.

SOUTH INDIAN Bank
EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை - 625 016. Ph: 0452 2300205.
Email: ro1015@sib.co.in CIN : L65191KL1929PLC001017.

இ - ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/14/2026-27
தேதி: 02.06.2026

Central Bank of India
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
1911 से आपके लिए "केंद्रित" "CENTRAL" TO YOU SINCE 1911

சூளை கிளை
140, வேப்பேரி நெடுஞ்சாலை, பெரியமேடு,
சென்னை-600 003 Ph: 044 - 2346 4312

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **நேரடியான சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு அந்த சொத்து **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **https://baanknet.com** என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: T.பிரஹதா, உரிமையாளர்: ICHAAS, வீட்டு முகவரி: 6-5/35, கொடியன் தோப்பு, பள்ளத்தூர், காரைக்குடி, சிவகங்கை-630107, **ஜாமீன்தாரர்: A.தமிழ்செல்வி** W/o.T.கணேஷ், வீட்டு முகவரி: 2/256, மல்லிகாபுரம், பில்லிகல்பாளையம், நாமக்கல் மாவட்டம்

கோரிக்கை அறிவிப்பு தேதி: 31.10.2025 / கடன் நிலுவைத்தொகை: **03.06.2026** அன்றுள்ளபடி **₹1,37,71,317.58** சட்டரீதியான கட்டணங்கள், வட்டி, செலவுகள் தவிர்த்து; (CBS closer Balance in CC ac-5542623320 ₹ 49,94,615/- And TL ac-5543189140 ₹ 87,76,702.58) **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 31.01.2026**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

காரைக்குடி பதிவு மாவட்டம், தேவகோட்டை சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.115/8, பட்டா எண்.1678, **பனங்காட்டுவயல் கிராமம், இருவானிவயல் குரூப், கன்னிவயல் பஞ்சாயத்து, கண்ணன்குடி யூனியன், தேவகோட்டை தாலுகா** என்னும் முகவாயில் உள்ள **1 ஏக்கர் மற்றும் 48 செண்ட் காலி நிலம்,** எல்லைகள்: வடக்கு: சர்வே எண்.115/4, 115/5 மற்றும் 115/6-ல் உள்ள EK சுப்பையா அம்பலம் & ரகுநாதன் புஞ்சை நிலம், தெற்கு: சர்வே எண்.115/9-ல் உள்ள M.ராமசாமி அம்பலம் புஞ்சை நிலம், கிழக்கு: சர்வே எண்.114/6-ல் உள்ள வெள்ளசாமி அம்பலம் புஞ்சை நிலம், மேற்கு: சர்வே எண்.115/7 & 115/10-ல் உள்ள EK சுப்பையா அம்பலம் & வெள்ளசாமி அம்பலம் புஞ்சை நிலம், **சொத்தானது Mrs.A.தமிழ்செல்வி (ஜாமீன்தாரர்) பெயரில் உள்ளது.**

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ **29,50,000/-** **டேவணித்தொகை** ₹ **2,95,000/-**
ஏல உயர்வு தொகை ₹ **20,000/-** **சுவாதீனம் வகை: நேரடியான (Physical)**
இ-ஏல தேதி/நேரம் 07.07.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 06.07.2026 மாலை 3.00 மணிக்குள்
சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 16.06.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: **https://baanknet.com** **(அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: **https://www.centralbankofindia.bank.in**

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா, சௌகார்பேட்டை, சென்னை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, முதன்மை மேலாளர்,** Mobile No. **99620 52877, கிளை மேலாளர்,** Mobile No. **89399 75806** அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6) & 9(1)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு
மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 03.06.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

கஞ்சா வழக்கில் பெண் உட்பட 2 பேர் கைது

ஸ்ரீவில்லிபுத்தூர்

வன்னியம்பட்டி போலீஸார், வன்னியம்பட்டி விலக்கு - மொட்டமலை சாலையில் சந்தேகத்துக்குரிய வகையில் நின்றிருந்த வைத்தியலிங்கபுரத்தைச் சேர்ந்த ராமநாதன் (37) என்பவரிடம் இருந்து 100 கிராம் கஞ்சா, பேச்சியம்மாள் (45) என்பவரிடம் இருந்து 400 கிராம் கஞ்சாவை போலீஸார் பறிமுதல் செய்து கைது செய்தனர். கருப்பாயி, முத்துமாரி ஆகியோரை போலீஸார் தேடி வருகின்றனர்.

எமது பதிப்புகள்: சென்னை. புதுவை. வேலூர். கோவை. சேலம். திருச்சி. தஞ்சாவூர். மதுரை. ராமநாதபுரம். நெல்லை. பெங்களூரு. திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Narayanan Santhanam, at Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).